## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையை ஜனநாயக முறைப்படியும், மாண்போடும், நேரிய வழியிலும் நடத்திட

## எனக்குப் பெரும் உதவியாக இருந்த முதல்வருக்கும் – துணை முதல்வருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி !

# நமது முதல்வர், மீண்டும் முதலமைச்சராக அரியாசனத்தில் அமருவார் !

# தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சி புரிவார்!

## சட்டப்பேரவையில் பேரவைத் தலைவர் மு. அப்பாவு உணர்ச்சிமிகு உரை !

சென்னை, பிப்.24-

**16வது சட்டமன்றப் பேரவையின் இறுதி நாளான பிப்ரவரி 20 - வெள்ளிக்கிழமை அன்று, "பேரவை மேற்கொண்ட அலுவல்கள்" குறித்து பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் நீண்டதோர் உணர்ச்சியும் உருக்கமும் மிக்க உரையாற்றினார்.**

**அவ்வுரையில் பேரவைத் தலைவர் அவர்கள், "சட்டமன்றப் பேரவையை மிகுந்த ஜனநாயக முறைப்படியும், நேரிய வழியிலும் மாண்போடும் நடத்துவதற்கு எனக்குப் பெரிதும் வழிகாட்டியாகவும். உறுதுணையாகவும் இருந்த முதல்வர் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்!" என்றும், "வரவிருக்கும் சட்டமன்றத் தேர்தலிலும் மகத்தான வெற்றி பெற்று, நமது முதல்வர் அவர்கள் மீண்டும் முதலமைச்சராக அரியாசனத்தில் அமருவார்கள்; தொடர்ந்து தமிழ்நாட்டு மக்களுக்கு நல்லாட்சி புரிவார்கள்!" என்றும் குறிப்பிட்டார்.**

**பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-**

"குடிதழீஇக் கோலோச்சு மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு"

எனும் ஈரடி வள்ளுவத்திற்கு பொருள் தந்து, குடிமக்களை அரவணைத்து ஆட்சி

நடத்தும் நல்லரசின் அடிச்சுவட்டை நானிலமே போற்றி நிற்கும் என்பதற்கு உதாரணமாய் திகழ்ந்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இவ்வறிவுக் களஞ்சியத்தின் வழித் தோன்றலாய், குறளோவியத்தின் மைந்தனாய், இருளின் ஆதிக்கத்தை தவிடுபொடியாக்க உதித்த உதயசூரியனாய் திகழும் முதலமைச்சர் அவர்களுக்கு எனது பணிவான வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### தலைவனின் பெருமை செயலால் அறியப்படும்!

ஒரு தலைவனின் பெருமை அவன் சொல்லால் அறியப்படுவதில்லை; அவன் செயலால் அளவிடப்படுகிறது. 'சொன்னதையும் செய்வோம், சொல்லாததையும் செய்வோம்' என வாக்குரைத்து, தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றியது மட்டுமல்லாமல், எளியோர், வலியோர் என பாராமல் அனைத்துத் தரப்பு மக்களின் உள்ளங்களும் குளிரும் வகையில் நாள்தோறும் நன்மை பயக்கும் திட்டங்களைத் தீட்டி, தமிழகத்தை தன்னிகரில்லா மாநிலமாக முன்னேற உழைத்தவர் நமது முதலமைச்சர் அவர்கள்.

### 'திராவிட மாடல்' திட்டங்கள்!


பசியால் பள்ளியில் மயங்கும் குழந்தைகள் வாட்டத்தைப் போக்கிய காலை உணவுத் திட்டம், பெண்களின் நிம்மதி பெருமூச்சுக்கான விடியல் பயணம், தலைநிமிர்ந்து நிற்க வைத்த மகளிர் உரிமைத் தொகை, கல்வி எனது உரிமை என உணர வைத்த புதுமைப் பெண் திட்டம், தமிழ்ப் புதல்வன் திட்டம், இளம் தலைவர்களை உருவாக்கும் நான் முதல்வன் திட்டம், பணிபுரியும் பெண்களுக்கான தோழி விடுதிகள், மூத்த குடிமக்களின் 2.0 அன்புச் சோலைத் திட்டம், முதலீடுகளை ஈர்த்த உலக முதலீட்டாளர்கள் மாநாடு, பன்னாட்டு விமான நிலையம், இளைஞர்களுக்கு அரசு வேலைவாய்ப்பு, உலகத்தரத்தில் நூலகம், தமிழின் பெருமையை நவிலும் பொருநை அருங்காட்சியகம், அறிவுசார் உட்கட்டமைப்புகள் என தீட்டிய திட்டங்கள் நமது முதலமைச்சரின் அருஞ்செயலுக்கு கட்டியம் கூறுகின்றன.

### எம்மொழிக்கு தலைகுனிவு எனில் ஏற்றிட மாட்டேன்!

நிர்வாகத்தில் கோலோச்சிய நமது முதல்வரின் திறத்தை சட்டமன்றத்தில் பார்த்திருக்கின்றோம். நிதியைக் குறைத்து அச்சுறுத்த முற்பட்டாலும் எம்மொழிக்கு தலைகுனிவு எனும்போது, ஏற்றிடமாட்டேன் என தலைகுனியாது தேசிய கல்விக் கொள்கையை மறுத்து, துச்சமென செயல்பட்டவர் நமது முதலமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாநிலத்தின் உரிமைகளை என்றும், எங்கும் விட்டுக்கொடுக்காமல், நீட் விலக்கு சட்டமுன்வடிவு, வக்ஃப் திருத்தச் சட்டமுன்வடிவு, பல்கலைக்கழக நிதிநல்கைக் குழுவின் வரைவு நெறிமுறைகள், கனிமச் சுரங்கம் அமைத்தல் ஆகியவற்றில் தமிழரது நிலைப்பாட்டை ஆணி அடித்தாற்போல் எடுத்தியம்பியவர் நமது முதலமைச்சர் அவர்கள்.

துணை முதலமைச்சர் அவர்கள், 'சின்னவர்' என்று அழைப்பவர்களுக்கு அன்பானவராய், 'சின்னவன்' என்று பேசுபவர்களுக்கு சிம்மசொப்பனமாய் விளங்குபவர், (மேசையைத் தட்டும் ஒலி) சதுரங்க சாணக்கியன், கிரிக்கெட் சிக்ஸர்களும், ஹாக்கியின் கோல்களும், கேரம் போர்டின் காய்களும் இவரின் திறத்தை எடுத்தியம்பும். மக்களின் தோளோடு தோளாக நிற்கும்போதும் சரி, எதிரிகளின் கணைகளை எட்டிப் பிடித்து, எதிர் அம்பு எய்தும்போதும் சரி, கோபத்தில்கூட, சிரித்த முகத்தோடு எதிரிகளை எதிர்கொள்ளும் இவரின் சொற்களில் கவனம் இருக்கும், நடத்தையில் நிதானம் தோன்றும்.

பெருமைமிகுந்த, வரலாறு பல கொண்ட இச்சட்டமன்றத்தில் நடுநிலைநாயகமாக அமர வைத்து, அழகுபார்த்து, பேரவைத் தலைவரின் தேர்தல் நடந்த 12-.5.-2021-ஆம் நாளன்று நமது முதலமைச்சர் பூரிப்போடு நம்பிக்கை வார்த்தைகளை நட்டார். "இந்தப் பேரவையை ஜனநாயக ரீதியில், அந்த மரபு வழி நின்று நிச்சயம் நடத்துவீர்கள் என்பதில் யாருக்கும் எள்ளளவும் சந்தேகமில்லை" என்ற முதல்வரின் அந்த வார்த்தைகளுக்கு செயல்வடிவம் தந்து, என்னுடைய பணியை இந்த அவையில் நிறைவேற்ற முழு சுதந்திரத்தையும் அளித்து, எவரது தலையீடும் கூடாது என ஆணையிட்ட முதலமைச்சர் அவர்களுக்கு நான் என்றென்றைக்கும் நன்றிக் கடன்பட்டிருக்கின்றேன்.



### சிறப்பு நேர்வுகள்

தமிழ்நாடு சட்டமன்ற நூற்றாண்டு விழா மற்றும் கலைஞர் அவர்களது திருவுருவப் படத் திறப்பு விழா, இப்பேரவை மண்டபத்தில் 2-.8.-2021 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. தலைமை விருந்தினராக வருகை புரிந்து சிறப்பித்த இந்தியக் குடியரசுத் தலைவர் ராம் நாத் கோவிந்த் அவர்களுக்கும், தலைமை வகித்த பன்வாரிலால் புரோகித் அவர்களுக்கும், வந்து சிறப்பித்த விருந்தினர்கள் அனைவருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2021--2022-ஆம் ஆண்டிற்கான திருத்திய நிதிநிலை அறிக்கை மற்றும் வேளாண்மை நிதிநிலை அறிக்கை ஆகியவை தமிழக வரலாற்றில் முதன்முறையாக 13.-8.-2021 மற்றும் 14.8.-2021 ஆகிய தேதிகளில் மின் நிதிநிலை அறிக்கைகளாக (e-Budget) பேரவைக்கு அளிக்கப்பட்டன. தமிழக வரலாற்றில் வேளாண்மைத் துறைக்கென தனி நிதிநிலை அறிக்கை அளிக்கப்பட்டதும் இதுவே முதன் முறை.

நீர்வளத் துறைக்கான மானியக் கோரிக்கை, முதன்முறையாக, நீர்வளத் துறை அமைச்சர் அவர்களால், 23-.8.-2021 அன்று பேரவையில் வைக்கப்பட்டது.

பேரவை நிகழ்ச்சிகள் நேரடி ஒளிபரப்பு-தமிழக சட்டமன்றப் பேரவை வரலாற்றில் முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அளிக்கப்பட்ட வாக்குறுதியை நிறைவேற்றும் விதமாக முதல் முறையாக சட்டமன்றப் பேரவை நிகழ்வுகள் 5-.1-2.022 முதல் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன. அதன் தொடர்ச்சியாக வினாக்கள்-விடைகள் நேரம், விதி 110-ன் கீழ் அறிக்கைகள், நிதிநிலை அறிக்கைகள் மற்றும் மானியக் கோரிக்கைகள்மீதான விவாதத்தின்போது அமைச்சர்கள் ஆற்றும் பதிலுரைகள் ஆகியன நேரடி ஒளிபரப்பு செய்யப்படுகின்றன.

### சட்டமன்றத்திற்கு ஒன்றிய அரசு வழங்கிய சான்றிதழ்!

காகிதமில்லா சட்டமன்றம் என்ற இலக்கினை எய்திடும் வகையில் நேவா திட்டத்தின்கீழ் சட்டமன்றப் பேரவைக் கூட்டம் புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் நடைபெறுவதற்கு ஏதுவாக உறுப்பினர்களின் மேசைகளின்மீது கையடக்க தொடுதிரைக் கணினிகள் (Tablet Devices) பொருத்தப்பட்டன. சட்டமன்றம் கூடிய அனைத்து நாட்களிலும் சட்டமன்ற உறுப்பினர்களின் பயன்பாட்டிற்கென வழங்கப்படும் அனைத்து ஆவணங்களும் தொடுதிரைக் கணினிகளில் பதிவேற்றம் செய்யப்பட்டன. இத்திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்தியமைக்கான சான்றிதழ் ஒன்றிய அரசால் தமிழக சட்டமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

சட்டமன்றப் பேரவையில் 13.-8.-2021 அன்று அளிக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கையில் 1921-ஆம் ஆண்டு முதல் சட்டமன்றப் பேரவை மற்றும் சட்ட மேலவை நிகழ்வுகள் குறித்த பதிவுகள் மற்றும் ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்படும் என்று அறிவிக்கப்பட்டதற்கிணங்க, முதற்கட்டமாக, 1952-ஆம் ஆண்டு முதல் 2025-ஆம் ஆண்டு வரையிலான சட்டமன்ற ஆவணங்கள் கணினிமயமாக்கம் செய்யப்பட்டு, சட்டமன்ற உறுப்பினர்கள், பொது மக்கள், ஆராய்ச்சியாளர்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும் பயனடையும் வகையில், 'tnlasdigital.tn.gov.in' என்னும் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 25.-4.-2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. இதுவரை 50,000-க்கும் மேற்பட்டோர் இந்த இணையதளத்தினை தொடர்புகொண்டிருக்கின்றனர்.

ஏழாவது கூட்டத்தொடரின் மூன்றாவது கூட்டத்திலிருந்து (14.-10.-2025 அன்று) இரங்கற்குறிப்புகள் மற்றும் இரங்கல் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்ட பெருந்தகைகளின் புகைப்படங்கள் மற்றும் அவர்கள் குறித்த சில விவரங்களுடன் Display panel-களில் காண்பிக்கப்பட்டன.

### நிறைவுரை

இந்த ஐந்தாண்டுகள், ஒரு அரசியல் கால கட்டமாக மட்டும் இல்லாமல், திராவிட இயக்கச் சிந்தனை நடைமுறை ஆட்சியாக மாறிய காலகட்டமாக தமிழக வரலாற்றில் நிலைபெறும். இந்த அரசு, தந்தை பெரியார் அவர்கள் முன்வைத்த பகுத்தறிவு, பேரறிஞர் அண்ணா அவர்கள் வலியுறுத்திய மக்களாட்சி மற்றும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வலியுறுத்திய சமூக நீதி ஆகிய கொள்கைகளை அரசியல் நடைமுறையாக மாற்றிய அரசு. இவையே இவ்வரசின் வேணவா!

அதிகாரம் என்பது ஆளுவதற்கான கருவி அல்ல; மக்களை உயர்த்துவதற்கான பொறுப்பு என்பதை இந்த ஆட்சி தொடர்ந்து வலியுறுத்தி செயல்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அரசு, அறத்தையே தன் ஆட்சியின் அடிப்படையாகக் கொண்டு மக்களின் நலனை முன்னிலைப்படுத்திய அரசு. இந்த ஐந்தாண்டு காலம், அறிவிப்புகள் அதிகமாக வெளியிடப்பட்ட காலம் அல்ல; அறிவிப்புகள் மக்களின் வாழ்க்கையில் மாற்றமாக உணரப்பட்ட காலம். இந்த அரசு, பெண்களின் முன்னேற்றத்தை தமிழகத்தின் முன்னேற்றமாக பார்த்த அரசு. இந்த ஆட்சியின் முக்கியமான அடையாளங்களில் ஒன்று, பெண்களை பயனாளிகளாக அல்ல, சுயநிலையுடன் செயல்படக்கூடிய சமூக சக்தியாக மாற்றியது.

### மாநில உரிமை–கூட்டாட்சி சமநிலை!

முத்தாய்ப்பாக தமிழக அரசால் அமைக்கப்பட்ட நீதிபதி குரியன் ஜோசப் தலைமையிலான உயர்மட்டக் குழு, ஒன்றிய-மாநில உறவுகள் தொடர்பாக அதிகாரப் பங்கீடு, மாநில சுயாட்சியின் அவசியம், அரசமைப்புத் திருத்தங்கள் குறித்த பார்வை, ஆளுநர் பதவி தொடர்பான விவாதங்கள், மாநிலங்களின் நிலைத் தன்மை, சட்டமன்ற மற்றும் பாராளுமன்றத் தொகுதி எல்லை/நிர்வாக அமைப்புகளின் சமநிலை ஆகியவை குறித்த முக்கியமான பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையின் முதல் பகுதியை அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது. இது ஒரு நிர்வாக அறிக்கை மட்டுமல்ல; இந்திய கூட்டாட்சியின் ஆழமான விவாதத்திற்கு தமிழகம் வழங்கிய அறிவுச் சிந்தனை. திராவிட இயக்கம் வலியுறுத்திய கோட்பாடான "மாநில உரிமை-கூட்டாட்சி சமநிலை" இன்று அறிவியல் அடிப்படையிலான ஆய்வாக முன்வைக்கப்பட்டுள்ளது.

நான் முன்பு சொன்னது போல இந்த அவையை நேரிய வழியில் நடத்திட எனக்கு பெரும் உதவியாக இருந்த முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டில் ஒரு குக்கிராமத்தில் சாதாரண ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து ஆசிரியராக பணியாற்றிய என்னை மேன்மை தாங்கிய அறிஞர்கள் பலர் அமர்ந்த இந்த இருக்கையில், என்னை அமர முன்மொழிந்த முதலமைச்சர் அவர்கள் என்னைப் பாராட்டிப் பேசிய வார்த்தைகள், இந்த ஐந்து ஆண்டு காலம் என்னை வழிநடத்தின. எந்த ஒரு நேர்விலும், தலையீடு இல்லாமல், முழு சுதந்திரம் அளித்து செயல்பட வைத்ததால் தான், தமிழக மக்களாலும், பத்திரிகைகளாலும், ஊடகங்களாலும், இந்த பேரவையின் செயல்பாடு ஜனநாயக ரீதியாக முதலமைச்சர் அவர்கள் 37 ஆண்டுகளுக்கு பின்பு (மேசையைத் தட்டும் ஒலி) இந்தச் சட்டமன்றத்தை ஜனநாயக ரீதியில் வழிநடத்துவதற்கு, வழி அமைத்துத்தந்த முதலமைச்சர் அவர்களுக்கு உங்கள் எல்லோரின் சார்பாகவும், நான் நன்றியை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### ஜனநாயக மாண்பை வெளிக்காட்டிய முதல்வர்!

இந்தப் பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்கள் தொகுதி சார்ந்த கோரிக்கைகளை வைக்கும்போதும், பதிலளிக்கச் செய்ததோடு தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், அமைச்சர்களை அறிவுறுத்தியவர் முதலமைச்சர் அவர்கள். கட்சி பேதமின்றி அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும், விருப்பத்திற்கேற்ப அவர்களது தொகுதியில் மேற்கொள்ளப்பட வேண்டிய 10 முன்னுரிமை திட்டங்களின் பட்டியலைப் பெற்று, செயல்படுத்த நடவடிக்கை எடுத்து, ஜனநாயக மாண்பை இந்தச் சட்டமன்றத்திற்கு வெளிகாட்டியவர் முதலமைச்சர் அவர்கள்.

பேரவையில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அதிக நேரம் பேச வாய்ப்பளித்து, ஆளுங்கட்சி உறுப்பினர்களின் நேரத்தை விட்டுக்கொடுத்து உதவியவர் முதலமைச்சர் அவர்கள். சில நேர்வுகளில், எதிர்க்கட்சி உறுப்பினர்களை வெளியேற்றும் நிலை ஏற்படும்போதும்கூட, முதலமைச்சர் அவர்கள் உடனடியாக அதிலே தலையிட்டு, எதிர்க்கட்சிகள் அவை நடவடிக்கைகளிலே பங்குபெற வைத்து, கோரிக்கை வைத்து, நடவடிக்கை இல்லாமல் எதிர்க்கட்சி

தொடர்ச்சி 14ஆம் பக்கம்

### அனைத்து நாட்களும் உறுப்பினர்கள் வருகை!

**11–.5.–2021 முதல் 5 ஆண்டுகளில்**

**பேரவைக் கூட்டம் நடைபெற்ற அனைத்து நாட்களும் பேரவைக்கு வருகைபுரிந்த உறுப்பினர்கள் பட்டியல் வருமாறு:**

| வ. எண் | உறுப்பினர்களின் பெயர் |
|---|---|
| 1. | திருமதி வி.அமலு |
| 2. | ச. அரவிந்த் ரமேஷ் |
| 3. | வி.ஜி. இராஜேந்திரன் |
| 4. | ரா. இளங்கோ |
| 5. | ஈ.ஆர். ஈஸ்வரன் |
| 6. | தா. உதயசூரியன் |
| 7. | ஜே.ஜே. எபினேசர் (எ) ஜான் எபினேசர் |
| 8. | இ. கருணாநிதி |
| 9. | எஸ். சுதர்சனம் |
| 10. | க. சுந்தர் |
| 11. | வி.சி. சந்திரகுமார் |
| 12. | ஏ.எம்.வி. பிரபாகரராஜா |
| 13. | ஜே.ஜி. பிரின்ஸ் |
| 14. | ஜி.வி. மார்க்கண்டேயன் |
| 15. | ஜெ. முகம்மது ஷாநவாஸ் |
| 16. | டாக்டர் வை. முத்துராஜா |
| 17. | பெ. ராமலிங்கம் |
| 18. | ஜோசப் சாமுவேல் |


### அவை முன்னவர் துரைமுருகனின் சட்டமன்ற மாண்பு - பெருந்தன்மை!



**அவையின் நடவடிக்கைகள் காரசாரமாய் நடைபெறுகையில், நகைச்சுவையால், தன் புன்சிரிப்புடன்கூடிய பேச்சால் அவையை குளிர வைத்த அவை முன்னவர் மற்றும் நீர்வளத் துறை அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிப்பதோடு, முதலமைச்சர் அவர்கள் கூறியதைப் போன்று அவர் சற்று உடல்நலம் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் இருந்தாலும், நேற்று முன்தினம் நான் அவரை சந்தித்தபோது, ஒரு கருத்தை என்னிடம் சொன்னார். சட்டமன்றம் அமைதியாக நடைபெறுகிறதா? முதலமைச்சர் அவர்கள் நன்றாக இருக்கின்றார்களா? அதோடு 'ஒன்றை நான் சொன்னதாக நீ சொல்லவேண்டும்' என்று ஒரு கருத்தைச் சொன்னார்.**

**தி.மு.க.வின் கட்டுப்பாடு மிக்க தலைவர்களில் முதன்மை வகிக்கிறார்!**

**"நான் சட்டமன்றத்திலே பேசிய வார்த்தைகளால், யாரையாவது சட்டமன்றத்திலே அவர்களுடைய மனம் புண்படும்படி, என்னுடைய வார்த்தைகள் இருந்தால் அதற்காக நான் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்பதை சட்டமன்றத்திலே பதிவு செய்து விடு, நான் சொன்னதாக" என்று சொன்னபோது, உண்மையிலே நான், என்னுடைய கண் சிவந்து கண்ணீர் வந்துவிட்டது. அந்த அளவிற்கு இந்த வயதிலும் பலமுறை சட்டமன்றத்திற்கு, மிக அதிகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவர், இந்த அளவிற்கு இந்தச் சட்டமன்றத்தில் உறுப்பினர்கள்மீதும் அவர்களுக்கு நான் ஏதேனும், சில நேரங்களில் வேண்டுமென்றே சொல்லமாட்டார். வேடிக்கையாக பேசுவதில்கூட, மனம் அவர்களுக்கு பாதிக்கப்பட்டிருக்குமானால் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன் என்று பதிவு செய்யுங்கள் என்று சொன்னது, உண்மையிலே அவருடைய பெருந்தன்மையை காட்டுவதோடு, நம்முடைய தம்பி தி.வேல்முருகன் சொன்னதுபோன்று, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய கட்டுப்பாடு மிக்க தலைவர்களில் முதன்மையாக இருக்கிறார் என்பதற்கு எடுத்துக்காட்டுதான், (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, அவர்கள் எந்த அளவிற்கு எங்களுக்கு உதவியாக இருந்தார் மேலும் நம் சபைக்கு உதவியாக இருந்தார் என்பது தெரியும்.**



### நமது முதல்வரை - காந்தி, நேரு, மார்க்ஸ், பெரியார், அண்ணா, கலைஞர் உருவில் பார்க்கிறேன்!

**நமது முதல்வர் அவர்கள் எந்நிலையிலும் தன்னிலை மாறாதாவர்; எதற்கும் அஞ்சாதவர்; உங்களிடம் ஒன்றைச் சொல்கின்றேன், முதல்வரிடம் மகாத்மா காந்தியின் அகிம்சையைப் பார்க்கிறேன். ஜவஹர்லால் நேருவின் சோசியலிசத்தைப் பார்க்கி றேன். மார்க்சிய தத்துவத்தின்படி எல்லோருக்கும் எல்லாம் என்ற சித்தாந்தத்தை பார்க்கிறேன். பெரியார், பேரறிஞர் அண்ணா, கலைஞர் அவர்களுடைய சமூக நீதியை பார்க்கிறேன். அண்ணல் அம்பேத்கரின் அரசியலமைப்பு சட்டத்தின்படி நடக்கும் மாண்பை உங்களிடம் பார்க்கிறேன். இரும்பு மனிதராகிய அன்னை இந்திராகாந்தியின் கம்பீரத்தை பார்க்கிறேன். தற்போது, இந்திய தாய்க்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியை எதிர் நோக்கும் தலைவராக உங்களை மட்டும்தான் இந்தியாவே எதிர்பார்க்கிறது.**

**தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவிற்கே உங்களுடைய அரசியல் பணிகள் தேவைப்படும் இத்தருணத்தில் உங்கள் பயணம் மேன்மேலும் சிறக்க என்னுடைய மனப்பூர்வமான வாழ்த்துக்களை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன்.**

## தற்போது, இந்தியத் தாய்க்கு ஏற்பட்டிருக்கக்கூடிய நெருக்கடியை எதிர் நோக்கும் தலைவராக நமது முதல்வரை மட்டும்தான் இந்தியாவே எதிர்பார்க்கிறது!